# 8 உரிமையும் கடமையும்

**டாக்டர் மு. வரதராசன் (1912 - 1974)**

தமிழகத்தின் திருப்பத்தூரில் பிறந்தவர். தமிழகத்தில் முதன்முதலாக கலாநிதிப்பட்டம் பெற்ற தமிழர் என்ற பெருமையும் இவரைச் சாரும். அத்துடன் அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றில் டி.லிட் சிறப்புப்பட்டம் பெற்ற முதல் தமிழறிஞராகவும் விளங்குகின்றார். ஆசிரியர், விரிவுரையாளர், துணை வேந்தர் முதலான பணிகளையாற்றிய இவர் தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி முதலிய மொழிகளில் புலமை உடையவராகவும் விளங்குகின்றார். நாவல், சிறுகதை, நாடகம், வாழ்க்கை வரலாறு முதலிய துறைகளுடன் தொடர்பான 85 நூல்களை எழுதியுள்ளார்.



*மனிதகுல வரலாற்றில் மனிதன் பல்வேறு சவால்களையும், தோல்விகளையும் சந்தித்து வருகின்றான். மனிதனை நிர்மாணிக்க முனைந்த முடியரசுகளும், குடியரசுகளும், சகலருக்கும் பொருந்தக்கூடிய சமத்துவத்தையும், விடுதலையையும் வழங்கிவிடவில்லை. இதிலிருந்து மீளுவதற்கான தனிமனிதனது பங்களிப்புக்களை இக்கட்டுரை தூண்டுகிறது.*

நாம் இந்தப் பெரிய உலகத்தில் ஒரு சிறிய மூலையில், ஒரு சூழ்நிலையில், ஒரு குடும்பத்தில், வாழ்கின்றோம்; அவ்வாறு வாழ்வதற்கு உரிமை வேண்டும்; உரிமை இல்லாத வாழ்வு உயிரற்ற வாழ்வு. ஆனால், மனம் போனபடி வாழ முழு உரிமை எவருக்கும் கிடைக்காது; என்றும் கிடைக்காது; ஓரளவுதான் உரிமை கிடைக்கும்; ஓரளவு கட்டுப்பாடு இருக்கத்தான் வேண்டும்.

அந்த அளவு உரிமை பெற்று வாழ வேண்டுமானால், அதற்காக நாம் உலகிற்குச் செலுத்தவேண்டிய வரி ஒன்று உண்டு. அதுதான் கடமை என்று கூறப்படுவது. கடமையைச் செய்யத் தவறுகிறவர்களுக்கு உரிமை கிடையாது.

குடும்பத்தில் தந்தை என்று வாழ்கின்ற ஒருவருக்குச் சில உரிமைகள் உண்டு; ஆனால் பொருள் வருவாய்க்கு உழைத்தல், குடும்பத்தைக் காப்பாற்றுதல் போன்ற கடமைகளும் அவருக்கு உண்டு. மகனுக்கும் சில உரிமைகள் உண்டு. தன் பெற்றோருக்குக் கட்டுப்பட்டு ஒழுங்காக நடக்க வேண்டும்; ஆசிரியர்களுக்குக் கட்டுப்பட்டு ஒழுங்காகப் படிக்க வேண்டும்; இவ்வாறு மகனுக்கும் சில கடமைகள் உண்டு. அலுவலகத்தில் அல்லது தொழிற்சாலையில் வேலை செய்வோருக்கு ஊதியம் பெறுதல், விடுமுறை பெறுதல், மருத்துவ வசதி பெறுதல் முதலிய உரிமைகள் உண்டு; அங்கே நேரத்துடன் சென்று குறிப்பிட்ட வேலைகளை ஒழுங்காகச் செய்யும் கடமைகளும் உண்டு.

உரிமையும் கடமையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. உரிமையை மட்டும் மிகுதியாக விரும்பிக் கடமையைப் புறக்கணித்தால், குழப்பம்தான் மிஞ்சும்; உள்ள உரிமையும் நிலைக்காது. இன்று உலகத்தில் பல பகுதிகளில் உள்ள சீர்கேடுகளுக்கும் குழப்பங்களுக்கும் இந்தத் தவறுதான் காரணம். பலர் இன்று உரிமையைப் பற்றியே போராடுகின்றார்கள். கடமையில் கருத்துச் செலுத்துவது குறைகின்றது. அலுவலகம், தொழிற்சாலை முதலியவை மட்டும் அல்ல; குடும்பமும் அப்படித்தான். எந்தக் குடும்பத்தில் கணவனும் மனைவியும் உரிமையைப் பற்றி மிகுதியாக நினைத்து, கடமையைப் புறக்கணிக்கின்றார்களோ, அந்தக் குடும்பத்தில் போராட்டம் ஏற்படும்; உரிமைப் போராட்டம் வளர்ந்தால் கணவன் மனைவி பூசல் வளரும்; மக்கள் ஒழுங்காக நடக்க மாட்டார்கள்; காதல், கற்பு முதலியவற்றிற்கு இடம் இருக்காது.

ஆகவே; எல்லோரும் ஒத்த அன்பு செலுத்தித் தன்னலத்தைக் குறைக்க வேண்டும்; அல்லது உரிமை பற்றி எண்ணும் அளவுக்குக் கடமை பற்றியும் உணர்வதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும். இல்லையானால், குடும்பப் போராட்டம், நாட்டுக்கலகம், உலகப் போர் முதலியவற்றைத் தவிர்க்க முடியாது.

எண்ணமும் பேச்சும் போதுமா? இவற்றைப் போக்க வழி என்ன என்று எண்ணிப் பார்த்து, ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற சிறு பங்கைச் செய்ய வேண்டும். போக்குவதற்கு வழி உள்ளது; அன்பை வளர்க்க வேண்டும். உரிமையைப் போலவே கடமையையும் போற்ற வேண்டும்; அல்லது, இயலுமானால் உரிமையை விட கடமையைப் பெரிதாகப் போற்றி வாழ வேண்டும்.

உரிமைக்கும் கடமைக்கும் இடையே உள்ள ஏற்றத்தாழ்வை நீக்குவதற்காக இயற்கை அமைத்த ஓர் அருமையான பாதுகாப்பே அன்பு எனப்படுவது. அன்பு எங்கே உயர்ந்து விளங்குகின்றதோ, அங்கே உரிமைப் போராட்டம் இல்லை; கடமைக் குறைவு இல்லை. அதனால் ''அன்பின் வழியது உயிர்நிலை'' என்கிறார் திருவள்ளுவர். அன்பு இல்லாத வாழ்க்கை பாலை நிலத்தில் உள்ள பட்டமரம் போன்றது என்றும் கூறுகின்றார். அதனால் குடும்பத்தில் அன்பு ஆட்சி செய்யவேண்டும் என்று முன்னோர்கள் ஏற்படுத்தினார்கள். இல்வாழ்க்கையை ஓர் அறம் என்று சிறப்பித்து, இல்லறம் என்றார்கள். மக்கட் பேறு, சுற்றம் தழுவுதல் முதலியவற்றை அதன் அங்கம் ஆக்கினார்கள். தேசபக்தி என்று அமைந்த அன்பு அப்படியே நாடு என்ற பெரிய குடும்பத்தைப் போற்றி வளர்ப்பதற்கு ஏற்பட்டதாகும். சமயம் அல்லது கடவுள் நெறி என்பதும், உலகத்தில் வாழும் எல்லோரிடமும் அன்பு செலுத்தி, உலகத்தையே கடவுளின் குடும்பம் என்று கருதும் பரந்த நோக்கத்தை வளர்ப்பதற்கு ஏற்பட்டதாகும்.

ஆனால், குடும்பத்தில் தாய் செலுத்தும் அன்பைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு தந்தையோ மக்களோ தன்னலம் உடையவர்களாய்த் தீமை செய்வார்களானால் என்ன ஆகும்? அப்படித்தான், நாட்டில் ஒரு சாராரின் அன்பைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு மற்றொரு சாரார் தன்னலமாக வாழ்வார்களானால், அன்பு வரண்டு போகும். உரிமைக்கும் கடமைக்கும் போராட்டம் ஏற்படும்.

பழங்காலத்தில் சமுதாயத்தில் ஆள்வோரும் ஆளப்படுவோரும் வெவ்வேறாக இருந்தார்கள். இக்காலத்தில், ''எல்லாரும் இந்நாட்டு மன்னர்'' என்ற நிலைமை உள்ளது. ஆளப்பிறந்தவர்கள் என்று யாரும் இல்லை. பழங்காலத்தில் இருந்த நிலைமைக்கு ஏற்றபடி உரிமை சிலருக்கும் கடமை பலருக்கும் என்று இருந்தன. இக் காலத்தில் ஒவ்வொருவருக்கும் உரிமையும் உண்டு; கடமையும் உண்டு. எதிர் காலத்தில் வேலைக்காரர் என்று ஒரு சாரார் இருக்க மாட்டார்கள். எல்லோரும் ஒவ்வொரு வேலை செய்து உழைத்துப் பழக வேண்டி ஏற்படும். வேலைகளிலும் உயர்ந்த வேலை தாழ்ந்த வேலை என்பது போய்விடும். வியர்வை வராத வேலைக்கு மதிப்பும் வியர்வை விடும் வேலைக்கு மதிப்புக் குறைவும் உள்ள நிலமை மாறிவிடும். ஆகையால், எந்த உழைப்பிற்கும் பழக்கப்படுத்திக்கொள்வோரே நன்றாக வாழ முடியும்.இப்போதே அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் முதலான நாடுகளில் உடம்பால் உழைப்பவர்கள் நல்ல ஊதியம் பெற்று மூளையால் உழைக்கும் அலுவலர்க்கு நிகராக வாழ்கின்றார்கள். அந்நாடுகளில் வீடுகளில் போலவே அலுவலகங்களிலும் எடுபிடி ஆட்கள் குறைந்து

வருகின்றார்கள். ஆகையால் சிறுசிறு வேலைகளையும் நாமே செய்து பழகுவது நல்லது. காரில் போகும் வசதி உடையவர்கள் காரைத் தூசு துடைக்கவும் கற்றுக்கொள்ள முன்வர வேண்டும். சைக்கிளில் போகின்றவர்களும் அதைத் துடைக்கவும் பழுது பார்க்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். உடம்பால் உழைக்கும் வேலைகள் இழிவானவை என்ற எண்ணம் நம் மனதை விட்டுப் போக வேண்டும்.

முன்னேறிவரும் அரசியல் நோக்கோடு சமுதாய நோக்கோடு பார்த்தாலும் சரி சமயநோக்கோடு பார்த்தாலும் சரி, மனிதருக்கு மனிதர் எந்த வகையான வேறுபாடும் கருதக்கூடாது. ஏழை என்றும் அடிமை என்றும் எவரும் இல்லை என்றார் பாரதியார். உயர்ந்தவர் என்றும் தாழ்ந்தவர் என்றும் எவரும் இல்லை. மனித சமத்துவம் எல்லா நாட்டு அறிஞர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும். சாதி, மதம், நிறம் முதலான எந்தக் காரணம் பற்றியும் வேறுபாடு செய்யாத நிலையை நோக்கி உலகம் நடக்கின்றது. எவ்வளவு பெரிய அமைப்பாக இருந்தாலும் எவ்வளவு பெரிய சமயமாக இருந்தாலும், மனிதரிடயே வேறுபாடுகளை வளர்க்கும் எதுவும் எதிர்காலத்தில் வாழ முடியாது. ஆகவே உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற கருத்தையே மறக்க வேண்டும்; உயர்ந்த தொழில் தாழ்ந்த தொழில் என்ற வேறுபாட்டை ஒழிக்க வேண்டும். அவரவர் பெறும் உரிமைகளுக்கு வரியாக அவரவர்க்கு வாய்க்கும் கடமைகளை மதித்துச் செய்யவேண்டும்.

**பொருளுணர் திறன் செயற்பாடு**

1. பின்வரும் தொடர்கள் இடம்பெறும் இலக்கியங்களையும், அவ் இலக்கியங்களைப் படைத்தவர்களையும் குறிப்பிடுக.
   அ. அன்பின் வழியது உயிர் நிலை ...
   ஆ. எல்லோரும் இந்நாட்டு மன்னர்
2. ''உரிமையும் கடமையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்'' என்ற தொடரினூடாக ஆசிரியர் வலியுறுத்தும் கருத்துக்களைக் குறிப்பிடுக.
3. கட்டுரை ஆசிரியர் தான் கூறவிழைந்த விடயங்களை வலியுறுத்தக் கையாண்ட உத்திகளைத் தெளிவுபடுத்துக.
4. உரிமை, கடமை, அன்பு இவற்றிற்கிடையிலான தொடர்பினைக் கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.

**குழுமச் செயற்பாடு**

நமது பிரதேசத்தைச் சேர்ந்த படைப்பாளி ஒருவரை நேர்காணல் செய்து அவரது கருத்துக்களையும் தகவல்களையும் கொண்டு நேர்காணல் பிரதியாக்குவோம்.

**திறன் வளர் செயற்பாடு**

''கடமைகளைச் செய்தால் உரிமைகளைப் பெறலாம்'' என்ற தலைப்பில் சிற்றுரை ஆற்றுவோம்.